**(சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**ஓ.எஸ்.எண்.191/2021** **நாள்.03.07.2023**

2023 ம் ஆண்டு ஜுலை திங்கள் 03 ம் நாள் வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெற்றிசெல்வன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | ராமானுஜம் | சாதி | |
| கிராமம் | ஒதியத்தூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 36 |

**வ.சா.1**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பில் 1-ம் சாட்சி ஆவேன். நான் **வ.சா.1 ஆக** இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு , கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஆவணங்கள்**

1. வ.த.சா.ஆ.1 - 12.03.2020 தேதியில் வாதியும் ,பிரதிவாதியும் ஏற்படுத்தி கொண்ட கிரைய ஒப்பந்தம் அசல்.

2.வ.த.சா.ஆ.2 – 27.08.2021 தேதியில் வாதி வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல்.

3.வ.த.சா.ஆ.3 - 30.08.2021 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல்.

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று தாவாப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**